**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 727/2021**

2024– ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05– ஆம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW1 - வது நபரின் வாக்குமூலம் ( 1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி ) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமரேசன் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | ராமலிங்கம் | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | ஒதியம் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 56/2024 |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** (தொடர்ச்சி):–

1) தாவா சொத்து எனது முன்னோர்களின் பெயரில் இருந்து எனக்கு கிடைக்கப்பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எனது முன்னோர்களின் பெயர்களை சொல்லமுடியுமா என்றால் எனது தாத்தா பெயர் குமாரசாமி ஆகும். அவருக்கு எத்தனை பையன்கள் என்றால் இரண்டு பேர். அவர்கள் பெயர் ராமலிங்க உடையார் மற்றும் ராமசாமி ஆகும். ராமலிங்கம் எனது அப்பா, ராமசாமி எனது சித்தப்பா ஆவார். அவர்கள் இருவர் தற்போது உயிருடன் உள்ளார்களா என்றால் எனது அப்பா இறந்துவிட்டார். எனது சித்தப்பா இருக்கிறார். தாவா சொத்து தொடர்பாக எனது தாத்தா குமாரசாமி பெயரில் ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2) எனது தாத்தாவிடமிருந்து எனக்கு எப்படி சொத்து பாத்தியப்பட்டது என்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து பூர்வீகமாக எனக்கு கிடைத்தது. தாவா சொத்து பூர்வீக சொத்ததாக இருந்திருந்தால் எனது தாத்தாவின் வாரிசுகளான ராமலிங்கம் மற்றும் ராமசாமி பெயருக்கு வருவாய் துறை ஆவணங்கள் ஏற்பட்டிருக்கும் என்றாலும் தாவா சொத்து பூர்வீக சொத்து என்று நான் சொல்வது பொய் என்று சொன்னாலும் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து ராஜமாணிக்கம் என்பவர் பெரம்பலூர் கூட்டுறவு வங்கியில் ஒரு அடமான பத்திரம் ஏற்படுத்தியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து தொடர்பாக 20.12.1999 ஆம் தேதி பெரம்பலூர் கூட்டுறவு வங்கியில் ஆவண எண்.3041/1999 என்ற அடமான பத்திரத்தை ராஜமாணிக்கம் என்பவர் ஏற்படுத்தியுள்ளார் என்றால் அது மோசடியாக ஏற்படுத்தப்பட்டது.

3) அதன் பின்னிட்டு 2017 ஆம் ஆண்டு ராஜமாணிக்கத்தின் இறப்பிற்கு பிறகு தாவா சொத்து அவருடைய வாரிசுகளுக்கு சென்றுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு ராஜமாணிக்கத்தின் வாரிசுகள் பெயரில் பட்டா ஏற்பட்ட

DM Judicial Kunnam

பிறகு உரிய பிரதிபலனுக்கு இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி செல்வகுமாரி என்பவர் ராஜமாணிக்கத்தின் வாரிசுகளிடமிருந்து தாவா சொத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை 2017 ஆம் ஆண்டு வரை ராஜமாணிக்கமும் அதற்கு பின்னிட்டு அவருடைய வாரிசுகளும் 2020 ஆம் ஆண்டில் இருந்து இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான செல்வகுமாரியும் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

4) தாவா சொத்து பக்கத்தில் எனக்கு வேறு நிலம் உள்ளதா என்றால் இருக்கிறது. தாவா சொத்திற்கும், எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், தாவா சொத்து எங்களது பூர்வீக சொத்து இல்லை என்றாலும், தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றாலும் தாவா சொத்தின் அருகே எனக்கு சொந்தமான மற்றொரு இடம் இருப்பதால் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கு 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உள்ள அனுபவத்தை நான் இடையூறு செய்ததால் போடப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல.

5) தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதை காண்பிக்கும் வகையில் யூ.டி.ஆர் பட்டா மற்றும் அ பதிவேடு உள்ளது என்றாலும் தாவா சொத்தில் உங்களது அனுபவத்தை காட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் எனது பெயரில் உள்ள பட்டா மற்றும் அ பதிவேடுகளை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். உண்மையிலேயே தாவா சொத்து எங்களது பூர்வீக சொத்தாக இருந்திருந்தால் எனது சித்தப்பா ராமசாமியையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருப்பேன் என்றாலும் தாவா சொத்து பூர்வீக சொத்து இல்லை என்பதால் தான் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் உரிய தரப்பினரை சேர்க்காததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC Court, Kunnam